# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2013 ஜனவரி திங்கள் 11.01.2013—ம் நாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக குப்பைகளை அகற்றுவதற்கு தேவையான 15 எண்ணங்கள் இரண்டு சக்கர வண்டிகளை (Wheel Borrows) ரூ.1,80,000/— மதிப்பீட்டில் 12—வது நிதிக்குழு திட்ட நிதியிலிருந்து வாங்குவதற்கு கடந்த 04.06.2012—ல் ON/ OFF Line மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 11.67% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S. நீல் கமல் லிமிடெட், மும்பை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்தரவு வழங்க இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.300 நாள் 19.07.2012—ன்படி ஒப்புதல் வழங்கியதன் அடிப்படையில் கடந்த 20.07.2012—ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி நிறுவனம் ஒப்பந்த உடன்படிக்கையின்படி குறிப்பிட்ட காலத்திற்குள் (60 நாட்களுக்குள்) தேவையான வண்டிகளை வினியோகம் செய்யாததால் 7 நாட்கள், 3 நாட்கள் மற்றும் 24 மணி நேர அறிவிப்புகள் வழங்கப்பட்டது. அதன் பின்னரும் மேற்படி நிறுவனத்திடமிருந்து இது தொடர்பாக எவ்வித தகவலும் பெறப்படாததால், பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு M/S. நீல் கமல் லிமிடெட் நிறுவனத்தின் பணி உத்தரவை ரத்து செய்யவும், ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டாம் இடத்தில் இருந்த M/S. ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூர் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும், இந்நகர்மன்றத் தலைவர் முன்அனுமதி அளித்துள்ளதால், M/S. ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூர் நிறுவனத்திற்கு, M/S. நீல் கமல் லிமிடெட், மும்பை நிறுவனம் அளித்த மதிப்பீட்டை விட 11.67% (ரூ.1,59,000/—) குறைவான விகிதத்தில் 15 எண்ணங்கள் இரண்டு சக்கர குப்பை வண்டிகளை வினியோகம் செய்வதற்கு வினியோக உத்தரவு வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று M/S. நீல் கமல் லிமிடெட், மும்பை நிறுவனத்தின் பணி உத்தரவை ரத்து செய்ததற்கும், M/S. ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூர் நிறுவனத்திற்கு அதே விலை விகிதத்தில் வினியோக உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/104/2006)

**தீர்மானம் எண்.475. அலுவலக குறிப்பு ஏற்று நீல் கமல் லிமிடெட், மும்பை நிறுவனத்தின் பணி உத்தரவை ரத்து செய்ததற்கும், ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூர் நிறுவனத்திற்கு அதே விலை விகிதத்தில் விநியோக உத்தரவு வழங்கியதற்கும், ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2011—12 திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான 1 மெட்ரிக் டன் குப்பை அள்ளும் மின்கலத்தில் இயங்கும் சிறிய டிப்பர் வாகனம் ( CCT-Cargo Tipper) 2 எண்ணங்களை ரூ.11,00,000/— மதிப்பீட்டில் வாங்குவதற்கு சிப்பம் முறையில் (சிப்பம் எண்.7) 04.06.2012—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 15.85% குறைவாக (ரூ.8,96,000/—) ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S.CARRIEAL CARS PRIVATE LTD, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தீர்மானம் எண்.297, நாள் 19.07.2012—ன்படி இந்நகர்மன்ற ஒப்புதல் வழங்கியதன் அடிப்படையில் 06.08.2012—ல் பணி உத்தரவு

வழங்கப்பட்டது. ஆனால் ஒப்பந்த உடன்படிக்கையின்படி உரிய காலத்திற்குள் மேற்படி வாகனங்கள் வினியோகம் செய்யப்படாததால் மேற்படி நிறுவனத்திற்கு 7 நாள், 3 நாள் மற்றும் 24 மணி நேர அறிவிப்புகள் அனுப்பப்பட்டது. அதன் பின்னரும் இது தொடர்பாக எவ்வித தகவலும் பெறப்படாததால், M/S.CARRIEAL CARS PRIVATE LTD நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவை ரத்து செய்யவும், பணியின் அவசர அவசியம் கருதி அதே விலை விகிதத்தில் (ரூ.8,96,000/– மதிப்பீட்டை விட 15.85% குறைவு) அடுத்ததாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.D.Engineering Company, Kovai நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் முக்கியத்துவம் கருதி M/S.CARRIEAL CARS PRIVATE LTD, CHENNAI நிறுவனத்தின் பணி உத்தரவை ரத்து செய்யவும், அதே விலை விகிதத்தில் அடுத்ததாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளM/S.D.Engineering Company, Kovai நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/7057/2011)

**தீர்மானம் எண்.476. அலுவலக குறிப்பு M/s.Carrieal Cars Private Ltd, Chennai நிறுவனத்தின் பணி உத்தரவை ரத்து செய்யவும், அதே விலை விகிதத்தில் அடுத்ததாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.D.Engineering Company, Kovai நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகிலுள்ள ஆழ்துளை கிணறு எண்.4, 5 மற்றும் பர்னட்டிவிளை திருப்பில் உள்ள ஆழ்துளை கிணறு எண்.10 ஆகியவற்றில் உள்ள மின்மோட்டார்கள் பழுதடைந்து இயங்காத காரணத்தினால் குடிநீர் வினியோகம் சீராக வழங்க முடியவில்லை. எனவே அலுவலக இருப்பில் உள்ள மூன்று புதிய மின் மோட்டார்களை மேற்படி மூன்று ஆழ்துளை கிணறுகளில் இறக்கி குடிநீர் விநியோகம் வழங்க மதிப்பீடு ரூ.17,000/–க்கு தயாரிக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் குடிநீர் பணி அவசர அவசியம் கருதி, நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன்கீழ் பணி மேற்கொண்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/2613/2012)

**தீர்மானம் எண்.477. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 4**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆழ்துளை கிணறு எண். 6, 11, 12, 10, 16, 18 ஆகியவற்றில் மெயின் சுவிட்ச் மற்றும் Fuse Carrier பழுதடைந்துள்ளது. மேலும் ஆழ்துளை கிணறு எண்.14–ல் உள்ள Cable wire பழுதடைந்து மின்மோட்டார் இயங்காத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட பழுதுகளை சரி செய்வதற்கு மதிப்பீடு ரூ.20,000/–க்கு தயாரிக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் குடிநீர் பணி அவசர அவசியம் கருதி, நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன்கீழ் பணி மேற்கொண்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/2574/2012)

**தீர்மானம் எண்.478. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 5**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத் தெருவில் கோயிலின் அருகில் 3'' பகிர்மான குழாய் உடைவு ஏற்பட்டுள்ளது, துறைமுகத்தெரு கோயில் முன்னால் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் அருகில் பொதுக்குழாய் மெயினில் அடைப்பு ஏற்பட்டுள்ளது., குழந்தையேசு காலனியில் உள்ள இரண்டு தெருக்களின் மேல் பகுதியில் தண்ணீர் Pressure

குறைவாக உள்ளதால் இரண்டு 2'' Sluice Valve – கள் பொருத்த வேண்டியுள்ளது, பழைய சிங்காரவேலன் காலனியில் 3'' Sluice Valve புதிதாக பொருத்த வேண்டி உள்ளது, காமராஜர் சாலையில் தண்ணீர் Pressure குறைவாக உள்ளதால் வண்ணாத்திவிளையில் 3'' Sluice Valve புதிதாக பொருத்துதல், சீம்பிளிவிளை ஆழ்துளை கிணறு எண். 14–ல் எற்பட்டுள்ள பழுதினை சரி செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.38,000/–க்கு தயாரிக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் குடிநீர் பணி அவசர அவசியம் கருதி, நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன்கீழ் பணி மேற்கொள்ளப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/2127/2012)

**தீர்மானம் எண்.479. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 6**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் அருகில், துறைமுகத்தெரு கோயில் முன்புறம், மாதாகாலனி, கொட்டில்பாடு மற்றும் சிங்காரவேலன் காலனி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீர் பாதுகாப்பின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேல்மூடி அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.15,000/–க்கு தயாரிக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் குடிநீர் பணி அவசர அவசியம் கருதி, நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன்கீழ் பணி மேற்கொண்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/2612/2012)

**தீர்மானம் எண்.480. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 7**

குளச்சல் நகராட்சியால் தற்போது 1201 குழல் விளக்குகள், 67 சோடியம் ஆவி விளக்குகள், 1 உயர் கோபுர மின்விளக்கு, 185 CFL விளக்குகள், 70 LED விளக்குகள் மற்றும் 9 மெட்டல் ஹாலிட் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2012–13–ம் ஆண்டு தெருவிளக்கு பராமரிப்பிற்கு தேவையான மின்உபகரணங்கள் வாங்குவதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.3,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/5044/2011)

**தீர்மானம் எண்.481. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலை J.S.R.Gas Office பழைய கட்டிடத்தின் அருகில் காமராஜர் சாலை முகப்பு பகுதியிலிருந்து செல்லும் சாலை மிகவும் குறுகலாக உள்ளதால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி மேற்படி சாலையை விரிவுபடுத்துவதற்கு வடிகால் ஓடையின் மீது மூடு சிலாப் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 1,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/63/2013)

**தீர்மானம் எண்.482. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

IUDM திட்டம் 2012–13–ன்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் முதல் துறைமுகத்தெரு வரை 6'' பிவிசி குடிநீர் விநியோக பிரதான குழாய் அமைக்கும் பணியினை ரூ. 15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு சிப்பம் முறையில் ( சிப்பம் எண்.6) 16.11.2012 அன்று முதல் கட்டமாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவை பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.தேவராஜ்<br>ஒப்பந்தத்தாரர், கருமன்கூடல்<br>மண்டைக்காடு. | தொழில் நுட்ப தகுதி பெறவில்லை. |
| 2 | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர்,<br>ரீத்தாபுரம். | தொழில் நுட்ப தகுதி பெறவில்லை. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி பெறாத காரணத்தால் இரண்டாவது முறையாக 05.12.2012 அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி எதுவும் பெறப்படவில்லை. எனவே மூன்றாவது முறையாக 21.12.2012 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதிலும் ஒப்பந்தப்புள்ளி எதுவும் பெறப்படவில்லை. எனவே திட்டப்பணியின் அவசர அவசியம் கருதியும், குறிப்பிட்ட கால கெடுவிற்குள் பணி முடிக்க வேண்டிய காரணத்தாலும், குடிநீர் பணியின் முக்கியத்துவம் கருதியும் மேற்படி பணியினை துறை மூலம் செய்வதற்கு மன்றம் அனுமதி வழஙகலாம்.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2750/2012/இ1)

**தீர்மானம் எண்.483. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. (துறை மூலம் பணி செய்திட முடிவெடுக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.37191/2012/இ1 நாள் 14.09.2012–ன்படி இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2011–12 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.390 நாள் 28.09.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதனடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ள குடிநீர் வினியோக பணிகளில் இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் மற்றும் காணிக்கை மாதா திருத்தலம் ஆகியவற்றின் அருகில் ரூ.60.00 லட்சம் மதிப்பீட்டில் 3.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் பணிக்கு சிப்பம் முறையில் (சிப்பம் எண்.7) 16.11.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் Technical Bid திறக்கப்பட்டது. அது தொழில் நுட்ப தகுதிவாய்ந்ததாக இருந்ததால் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் முன்னிலையில் 27.11.2012 அன்று Price Bid திறக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.ஜெயபிரகாஷ்,<br>4/34, காந்தி தெரு,<br>கொங்கர்பாளையம்,<br>திருப்பூர் | 14.02 % மதிப்பீட்டைவிட கூடுதல்.<br>(ரூ.60,81,319. 90) |

மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி வாய்ந்ததாக உள்ளதாலும், திட்ட நிதி பணியின் அவசர அவசியம் காரணமாகவும், குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் பணி முக்கியத்துவம் கருதியும், மதிப்பீட்டைவிட விலைவிகிதத்தை குறைத்து வழங்க கேட்டு மேற்படி ஒப்பந்ததாரருக்கு Negotiation Letter வழங்கப்பட்டது. 02.01.2013 அன்று ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ஜெயபிரகாஷ் என்பவரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில், கட்டுமானப் பொருட்களின் விலை விகிதம் மற்றும் ஆட்கள் கூலி ஆகியன அரசு நிர்ணயித்த விலை விகிதத்தைவிட பொதுச் சந்தையில் கூடுதலாக உள்ளதாகவும், தான் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 14.02 % கூடுதல் விலை விகிதத்திற்கு பதில் மதிப்பீட்டை விட 4.95% கூடுதல் விலைவிகிதத்தில் பணி மேற்கொள்வதாகவும், இதற்கு மேல் குறைக்க இயலாதெனவும் தெரிவித்துள்ளார். எனவே நகராட்சி பொறியியல் துணை விதி பிரிவு (2.7.2) –ன் படி மேற்படி ஒப்பந்ததாரரால் விலைக்குறைப்பு சம்மதக் கடிதத்தில் (Negotiation Letter) தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தினை ஏற்று, மதிப்பீட்டை விட 4.95 % கூடுதல் விலை விகிதத்தில் பணி செய்ய LOA (Letter of

Acceptance) வழங்கவும், இதில் மதிப்பீட்டை விட கூடுதலாகும் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :**

மேற்படி குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், நகராட்சி மதிப்பீட்டில் உள்ள கட்டுமானப் பொருட்களின் விலையைவிட பொதுச்சந்தையில் விலை கூடுதலாக உள்ளதாலும், இத்திட்டம் அரசு மானியத்துடன் உள்ள சிறப்பு திட்டம். எனவே உரிய காலத்தில் பணி முடிக்க வேண்டிய அவசியத்தாலும், பொறியியல் துணை விதி பிரிவு (2.7.2 ) –ன்படி சிப்பம் 7–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், திரு.எஸ்.ஜெயபிரகாஷ் என்பவரின் மதிப்பீட்டைவிட 4.95% கூடுதலான விலைவிகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று LOA (Letter of Acceptance) வழங்கவும், மேலும் இதில் கூடுதலாகும் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/ 2750/2012)

**தீர்மானம் எண்.484. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. கூடுதலான விலை விகித ஒப்பந்த புள்ளியை ஏற்று LOA வழங்கவும், கூடுதல் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2013 ஜனவரி திங்கள் 31.01.2013–ம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் (IUDM) 2013–14 திட்டத்தின்கீழ் பணிகள் தேர்வு செய்து விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.3295/2012/இ1 நாள் 17.01.2013–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்காணும் பணிகள் தேர்வு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| I | **சாலைப்பணிகள்** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளிரோட்டில் C.M.Plant ஐ உபயோகித்து தார் சாலை அமைத்தல் | 49.50 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, செக்காலத்தெரு மற்றும் குறுக்கு தெருக்களில் பேவர் பிளாக் அமைத்தல் | 15.00 |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட குளச்சல் திங்கள்நகர் சாலையில் பவுண்டரி ரோடு முதல் திக்கணங்கோடு வரை பேவர் பிளாக் வைத்து நடைபாதை (Road Side Beams) அமைத்தல். | 25.00 |
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட கணியாக்குடி , நரிக்கல் சந்திப்பு முதல் பாம்பூரி வாய்க்கால் அணுகுசாலை வரை பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 26.30 |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 பந்தவிளை முதல் இராஜக்கமங்கலம் பிரதான சாலை வரை மற்றும் குறுக்கு தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 19.20 |
| 6 | இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத் தெருவில் வார்டு எண். 11 மற்றும் 13 –ல் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 16.00 |
| 7 | இந்நகராட்சிக்குட்பட்ட மரமடியில் வார்டு எண்.8, 9 மற்றும் 10 பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 15.00 |
| 8 | இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு கடற்கரை செல்லும் அணுகு சாலையில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 18.00 |
| 9 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4–ல் சுனாமி காலனியில் மார்ட்டின் வீட்டின் அருகில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 5.40 |
| 10 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல், மாதாகாலனியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 9.40 |
| 11 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23–ல் தைநாத்தன்கரையில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 19.50 |
| | **மொத்தம்** | **218.30** |
| II | **வடிகால் ஓடை பணிகள்** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட குளச்சல் திங்கள்சந்தை பிரதான சாலை பகுதியில் (அண்ணா சந்திப்பு முதல் பேருந்து நிலைய தெற்கு பக்கம் வரை) மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைத்தல். | 48.00 |

| | | |
|---|---|---|
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட குளச்சல் திங்கள்சந்தை பிரதான சாலையில் திக்கணங்கோடு சாலை முதல் பேருந்து நிலையம் வரை வடக்கு பக்கம் மற்றும் கிரி தங்கம் மருத்துவமனை முன்புறம் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைத்தல். | 49.75 |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுக சாலையில் (லூர்தம்மாள் சைமன் சாலை) மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைத்தல். | 18.70 |
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை மற்றும் சீம்பிளிவிளை தெருவில் வடிகால் ஓடைக்கு மேல்மூடி அமைத்தல். | 10.00 |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட இக்பால் தெருவில் வடிகால் ஓடைக்கு மேல்மூடி அமைத்தல். | 9.00 |
| 6 | இந்நகராட்சிக்குட்பட்ட குளச்சல் கடை மற்றும் ஆண்டிப்பிள்ளை தெரு வரை வடிகால் ஓடைக்கு மேல்மூடி அமைத்தல். | 16.70 |
| 7 | இந்நகராட்சிக்குட்பட்ட ஆசாத்நகர், மல்லிக்காகிணறு சாலை, இந்திரா காலனி முதல் பெரியபள்ளி சாலை வரை வடிகால் ஓடைக்கு மேல்மூடி அமைத்தல். | 13.60 |
| 8 | இந்நகராட்சிக்குட்பட்ட ஆசாரிமார் மேலத்தெரு, ஆசாரிமார் கீழத்தெரு வடிகால் ஓடைக்கு மேல்மூடி அமைத்தல். | 16.00 |
| | **மொத்தம்** | **181.75** |
| **III** | **திடக்கழிவு மேலாண்மை பணிகள்** | |
| 1 | இந்நகராட்சிக்கு தேவையான 240 லிட்டர் மற்றும் 120 லிட்டர் கொள்ளளவு கொண்ட மொத்தம் 250 எண்ணங்கள் HDPE Dust Bins வினியோகம் செய்தல். | 12.50 |
| | **மொத்தம்** | **12.50** |
| **IV** | **குடிநீர் விநியோகப் பணிகள்** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட அலுவலக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி முதல் பள்ளிவிளாகம் வரை 4" பிவிசி குடிநீர் விநியோக குழாய் பதித்தல் மற்றும் மொர்க்கண்டைல் வங்கி முதல் பேருந்து நிலையம் முன்புறம் அமைந்துள்ள மாடன்கோவில் வரை ஏற்கெனவே போடப்பட்டுள்ள ஏ.சி. பைப்பை மாற்றி 6" பிவிசி குடிநீர் விநியோக பிரதான குழாய் அமைத்தல். | 10.00 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட வி.கே.பி. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி முதல் பர்னட்டிவிளை மின்கம்பம் எண். FII/29 வரையிலும் பள்ளிரோட்டில் பாலையா மார்பிள் கடை வரையிலும் 4" பிவிசி குடிநீர் விநியோக குழாய் பதித்தல் மற்றும் பாலத்தன்கரை சம்ப் முதல் விகேபி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை 6" பிவிசி குடிநீர் விநியோக பிரதான குழாய் அமைத்தல். | 21.00 |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி முதல் கொட்டில்பாடு வரை 4" பிவிசி குடிநீர் விநியோக குழாய் அமைத்தல் | 6.70 |
| 4 | இந்நகராட்சிக்கு தேவையான 50 கிலோ வாட் எரிசக்தி திறன் கொண்ட சோலார் பவர் பிளான்ட் நிறுவுதல். | 70.00 |
| | **மொத்தம்** | **107.70** |
| **V** | **தெருவிளக்கு பணிகள்** | |
| 1 | 24 Watts, LED விளக்குகள் மற்றும் உபகரணஙகள் வினியோகம் செய்தல் மற்றும் பொருத்துதல். | 15.00 |
| | **மொத்தம்** | **15.00** |
| **VI** | **வணிக வளாகப் பணிகள்** | |
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரிச் சந்தையில் நிரந்தர கடைகள் கட்டுதல் பணி. | 50.00 |

| | | |
|---|---|---|
| | **மொத்தம்** | **50.00** |
| **VII** | **அலுவலக கட்டிடம்** | |
| 1 | இந்நகராட்சியின் தற்போதைய அலுவலக கட்டிடத்தை மேம்படுத்துதல் | **25.00** |
| | **மொத்தம்** | **25.00** |

எனவே மேற்காணும் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) சமர்ப்பிப்பதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பித்ததற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/115/2013)

**தீர்மானம் எண்.485. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக பயன்பாட்டு குடிநீர் இணைப்புகளில் மீட்டர் பொருத்தப்படாமல் உபயோகப்படுத்தப்பட்டு வருவதால் மோட்டார் மூலம் குடிநீர் உறிஞ்சுதல், மரம், செடிகள் மற்றும் கட்டிட வேலைகளுக்கு குடிநீரை பயன்படுத்துதல் மற்றும் நல்லியை அடைக்காமல் குடிநீரை வீணாக்குதல் போன்ற செயல்களை பொதுமக்கள் மேற்கொண்டு வருகின்றனர். இவற்றை தடுக்கும் பொருட்டு அனைத்து குடிநீர் இணைப்புகளுக்கும் மீட்டர் பொருத்தவும், நகராட்சி விதிமுறைகளுக்கு புறம்பாக நகராட்சி சட்டம் 134 ( e ), ( g ) –ன்படி குடிநீரை வீணாக்குபவர்கள் மீது உரிய மேல்நடவடிக்கை எடுக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : குடிநீர் இணைப்பை உடன் துண்டிப்பு செய்யவும், அபராதம் விதிக்கவும் மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/4337/2012)

**தீர்மானம் எண்.486. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2013 ஜனவரி திங்கள் 31.01.2013–ம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண். 1**

இந்நகராட்சி பகுதியில் நிலவி வரும் மின்பற்றாக்குறை காரணமாக நகர் முழுவதும் சீரான குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே நகர்மன்றத் தலைவரின் கடிதத்தின்படி, நாள் ஒன்றிற்கு 4 ஜெனரேட்டர்கள் (62 KVA, 82 KVA, 125 KVA, 250 KVA ) வாடகைக்கு எடுத்து 16 ஆழ்துழாய் கிணறுகளிலிருந்து இரண்டு நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்குவதற்கும், அதற்கான கேபிள் பதிப்பதற்கும், டீசல் செலவிற்கும் நாள் ஒன்றிற்கு ரூ.29,000/– ஆகும் என உத்தேசிக்கப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன்கீழ் பணியினை மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :

| வ.எண். | ஜெனரேட்டர் KVA | M/s.லீலா சவுண்ட்ஸ் ஒருநாள் வாடகை (டீசல் தவிர) | M/s.ராஜா பவர் யூனிட் ஒருநாள் வாடகை (டீசல் தவிர) | குறைந்த விலைப்.ள்ளி |
|---|---|---|---|---|
| 1 | 7.50 | 700.00 | 800.00 | M/s.லீலா சவுண்ட்ஸ் |
| 2 | 62 | 2250.00 | 2000.00 | M/s.ராஜா பவர் யூனிட் |
| 3 | 82 | 2500.00 | 2000.00 | ‘‘ |
| 4 | 125 | 2750.00 | 2500.00 | ‘‘ |
| 5 | 250 | 5500.00 | 5000.00 | ‘‘ |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் அலுவலக பயன்பாட்டிற்கு இனம் எண்.1–க்கு லீலா சவுண்ட்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்றும், மேலும் குடிநீர் பிரிவிற்கு இனம் எண்.2, 3, 4, 5 –க்கு M/s.ராஜா பவர் யூனிட் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கப்பட்டது.

அதன்பின்னர் சுனாமி காலனிக்கு இரண்டு நாட்களுக்கு ஒருமுறை கூட சீராக குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டதால், கூடுதலாக 62 KVA ஜெனரேட்டர் ஒன்றினை அமைப்பதற்கு M/s.ராஜா பவர் யூனிட் ராஜா பவர் யூனிட் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேலும் மேற்படி ஜெனரேட்டர்களுக்கான வாடகை, டீசல் செலவு ஆகியவை அலுவலக செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**ஜெனரேட்டர் வாடகை குறித்த விவரம் பின்வருமாறு :**

| ஜெனரேட்டர் விவரம் | நாள் | மொத்த நாட்கள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 14.10.2012 முதல் 23.10.2012 | 10 நாட்கள் | 7,000/– |
| 62 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–)<br>82 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 14.10.2012 முதல் 23.10.2012 | 10 நாட்கள் | 80,000/– |

| | | | |
|---|---|---|---|
| 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 29.10.2012 முதல் 02.11.2012 | 5 நாட்கள் | 3,500/– |
| 62 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–)<br>82 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 24.10.2012 முதல் 02.11.2012 | 10 நாட்கள் | 80,000/– |
| 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 05.11.2012 முதல் 12.11.2012 | 7 நாட்கள் | 4,900/– |
| 62 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–)<br>82 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 03.11.2012 முதல் 12.11.2012 | 10 நாட்கள் | 80,000/– |
| 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 14.11.2012 முதல் 22.11.2012 | 8 நாட்கள் | 5,600/– |
| 62 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–)<br>82 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 13.11.2012 முதல் 22.11.2012 | 10 நாட்கள் | 80,000/– |
| 62 KVA - 1 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 07.11.2012 முதல் 22.11.2012 | 16 நாட்கள் | 32,000/– |
| 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 23.11.2012 முதல் 02.12.2012 | 8 நாட்கள் | 5,600/– |
| 62 KVA -3 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–)<br>82 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 23.11.2012 முதல் 02.12.2012 | 10 நாட்கள் | 1,00,000/– |
| 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 03.12.2012 முதல் 22.12.2012 | 18 நாட்கள் | 12,600/– |
| 62 KVA -3 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–)<br>82 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 03.12.2012 முதல் 22.12.2012 | 20 நாட்கள் | 2,00,000/– |
| 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 24.12.2012 முதல் 01.01.2013. | 6 நாட்கள் | 4,200/– |

| | | | |
|---|---|---|---|
| 62 KVA -3 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) 82 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 23.12.2012 முதல் 01.01.2013 | 10 நாட்கள் | 1,00,000/– |
| **மொத்தம்** | | | **7,95,400/–** |

**டீசல் பில் குறித்த விவரம் பின்வருமாறு :**

| நாள் | தொகை ரூ. |
|---|---|
| 13.10.2012 முதல் 30.10.2012 | 1,13,752/– |
| 04.11.2012 முதல் 15.11.2012 | 1,93,534/– |
| 16.11.2012 முதல் 30.11.2012 | 2,67,382/– |
| 01.12.2012 முதல் 15.12.2012 | 2,52,104/– |
| 16.12.2012 முதல் 31.12.2012 | 1,83,348/– |
| **மொத்தம்** | **10,10,120/–** |

எனவே இந்நகராட்சி பகுதியில் சீரான மின்விநியோகம் பெறப்படும் வரையில் குடிநீர் அவசர அவசியம் மற்றும் பொதுமக்கள் நலன் கருத்தில் கொண்டு வாடகை ஜெனரேட்டர்களை பயன்படுத்தவும், அதற்கான செலவுத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் ஏற்கனவே செலவு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.18,05,520/– க்கு ஆணையர் அனுமதி பெற்று பிரிவு 15–ன் கீழ் மேற்கொண்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u>

(1) குடிநீர் அவசர அவசியம் மற்றும் பொதுமக்கள் நலன் கருத்தில் கொண்டு வாடகை ஜெனரேட்டர்களை 05.02.2013 வரை பயன்படுத்தவும், அதற்கான செலவுத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) ஏற்கனவே செலவு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.18,05,520/– க்கு ஆணையர் அனுமதி பெற்று பிரிவு 15–ன் கீழ் பணி மேற்கொண்டு தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ2/4030/2012)

**தீர்மானம் எண்.487. மன்றத்தின் பார்வைக்கு வைத்தது ஏகமனதாக ஏற்றுகொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது. அலுவலக குறிப்பு ஏற்று பிரிவு எண்.15–ன் கீழ் பணி மேற்கொண்டது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17–ல் சாஸ்தா கோவில் முன்புறம் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான மதீப்பீட்டுத் தொகை ரூ.1,76,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.447 நாள் 30.11.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 18.01.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.சத்தியதாஸ், ஒப்பந்தத்தாரர் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | 0.78% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.சத்தியதாஸ், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4442/2012)

**தீர்மானம் எண்.488. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19–ல் நெசவாளர் தெரு அஞ்சாலிவிளை அங்கன்வாடி மையம் அருகில் உள்ள குறுக்கு தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான மதீப்பீட்டுத் தொகை ரூ.1,60,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.474 நாள் 31.12.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 18.01.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு. |
| 2. | திரு.C. தேவகரின் சேம், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.94% கூடுதல். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3648/2012)

**தீர்மானம் எண்.489. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட KSSSகாலனி மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து மேற்காக புதிதாக HDPE மற்றும் PVC குடிநீர் வினியோக குழாய் அமைத்து பழைய குடிநீர் குழாயுடன் இணைக்கும் பணிக்கான மதீப்பீட்டுத் தொகை ரூ.30,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.455 நாள் 30.11.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 18.01.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு. |
| 2. | திரு.P.தங்கமணி, ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 2.41% கூடுதல். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக அளித்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ2/4472/2012)

**தீர்மானம் எண்.490. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21–ல் காவடிவிளை குறுக்கு தெருவில் ஏற்கனவே அமைக்கப்பட்ட Cut Stone சாலை தற்போது மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால், மேற்படி தெருவில் வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :**

மேற்படி மதிப்பீட்டு தொகை ரூ.2,00,000/– ல் ரூ.1,85,606/–ஐ SJSRY 2012-13 நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டம் கூலி வேலை வாய்ப்பு (UWEP ) பிரிவு நிதி ஒதுக்கீட்டுத் தொகையில்

மேற்கொள்ளவும், மீதமுள்ள தொகை ரூ.14,394/—ஐ இந்நகாட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.C.O/2962/2012)

**தீர்மானம் எண்.491. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தின் அருகில் அமைந்துள்ள கிளை நூலகத்தின் பக்கச் சுவர்கள் மிகவும் மோசமாக பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அதற்கான நிரந்தர கட்டிடம் கட்டப்படும் வரை வாடகையில்லா கட்டிடவசதி செய்து கொடுக்க கோரியுள்ளதாலும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி குழுமம் 2012—13 திட்டத்தின் கீழ் பேருந்து நிலைய 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு அருகில் அமைந்துள்ள படிப்பகத்தை கவியரசு கண்ணதாசன் வணிக வளாகத்தில் முதல் தளத்தில் காலியாக உள்ள கடைகளில் தற்காலிகமாக மாற்றம் செய்து விட்டு அந்த இடத்தில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்க இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.392 நாள் 03.10.2012 மூலம் ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளதால், கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்.19 முதல் 23 வரையிலான கடைகளில் படிப்பகத்தை தற்காலிகமாக மாற்றம் செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ளவும், மேற்படி வணிக வளாக மாடிப் படிகள் நான்கிலும் கிரில் கேட் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,20,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4647/2012)

**தீர்மானம் எண்.492. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி